
பார்வதி
சித்திரக் கதை
ஆகஸ்ட் -95
ரூ. 5/-
மலையில்
மறைந்த
மனிதன்


கதை - சித்திரம்
- சிமி
மகதபுரம். பாரதத்தின் பழம் பெரும் நாடுகளில் ஒன்று. சூரிய சிம்மரின் ஆட்சிக் காலம். காட்டில் விறகு சேகரிக்க வந்திருந்தார்கள் கிராமவாசிகள் சிலர், பீதியுடன்!
பொழுது சாய்கிறது. புறப்படுங்கள். போவோம்.
கடவுளே! அந்தக் காட்டு அரக்கன் கண் ணில்படாமல் தப்ப வேண்டும் நாம்.
எனக்கு பயமாயிருக் கிறது!
சும்மா வாங்கப்பா, இதெல் லாம் மூடநம்பிக்கை. அரக்கனாவது, அவன் மனிதனைத் தின்பதாவது.



காட்டில் வேகமாக இருள் சூழ ஆரம்பித்தது... திடீரென்று.....
ஹஹ் ஹஹ் ஹா.
அரக்கன் அதோ... ஓடுங்கள்...
அய்யோ பிசாசு—
ஹி... ஹி... ஹி..! ஓடுங்கள் எனக்கு ஒரு ஆள் போதும்.
உதவி..!
ஓடு.. ஓடு..!
அய்யோ..!
கர்ர்..ர்..ர்..


சூரிய சிம்மரின் தர்பாரில்...
அரசே! நரமாமிசம் தின்னும் இந்தக் காட்டு மனிதனைப் பற்றிப் பல தடவை புகார் வந்து விட்டது.
நரமாமிசமா?!
ஆம் அரசே. காட்டு ஓரம் வசிக்கும் கிராம வாசிகளை அவன் பிடித்து தின்று விடுகிறானாம்.
என்னது? மனிதனை தின்னும் காட்டு மனிதனா?
என்னால் இதை நம்ப முடியவில்லை!
உண்மை அரசே. இரவு நேரத்தில் கிராமவாசிகளை அவன் காட்டுக்குள் தூக்கிப் போவதைப் பலரும் பார்த்திருக்கிறார்கள்.
ம்...மந்திரி! இனி புகார் வந்தால் உடனே எனக்குத் தெரியப்படுத்துங்கள்.
உத்தரவு அரசே!


இரவு நேரம், நகரில் இருந்து திரும்பும் வணிகர் கூட்டம்.
இந்த இடம் எதுவென்று தெரியுமா?
நரபட்சினியின் காடு!
கடவுளே! இந்த இடத்தைத் தாண்டினால் போதும்!
திடீரென்று—
கொஞ்சம் நில்லுங்கள். என் வண்டிச் சக்கரம் புதைந்து விட்டது. ஒரு கை கொடுங்கள்.
முன்னால் போனவர்கள் திரும்பிவர ஆரம்பித்தார்கள். அப்போது புதர்களுக்கிடையே இருந்து வெளிப்பட்டது ஒரு கரிய உருவம்.
நான் தான் நரபட்சினி.
ஏ...! அது என்ன..?


வியாபாரிகள் வண்டியிலேறிப் பிழைத்தால் போதும், என்று ஓட்டம் பிடித்தார்கள்.
வேகமா போ...
கடக்... கடக்... கடக்...
அய்யோ... காப்பாத்துங்க!
ஹ்ஹா... ஹ்ஹா... ஹ்ஹா!
நரபட்சிணி, வியாபாரியைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் புகுந்து மறைந்தது.


சூரிய சிம்ஹராஜா அதிர்ந்தார்.
என்னது! அவன் மீண்டும் நம் குடிமக்களைத் தாக்கினானா?
யாரங்கே! கோட்டைத் தளபதியை வரச்சொல்....
உத்தரவு அரசே!
அன்றிரவே அரசர் காட்டோர கிராமத்தில் காவல் ஏற்பாடு செய்தார்.
அதே நேரம் காட்டுக்குள்—
ம்... மனிதவாடை வீசுகிறதே..
ஓ... என்னைப் பிடிக்க வந்தவர்களா..? நான் யாரென்று காட்டுகிறேன்...


கூடாரத்தைத் தாக்கினான்.
என்ன அது?
காட்டு மனிதன்!
வீரர்கள், காட்டுவாசியைச் சூழ்ந்து கொண்டார்கள்.
அவன் வந்து விட்டான்!
எல்லோரும் ஆயுதங்களை எடுங்கள்!
ஆனால், அவர்கள் செயல்படும் முன் ஒரு வீரனைக் காலைப் பிடித்துத் தூக்கிச் சுழற்றினான் அந்த அரக்கன்.
ஜிர்..ர்..ர்
ஐயோ...


படைத் தலைவனைத் தூக்கிக் கொண்டு காட்டில் ஓடி மறைந்தான்.
மறுநாள் காட்டுக்கு வந்தவர்களுக்கு அதிர்ச்சி!
அய்யோ... மனித எலும்புகள்.
நரபட்சினி!
இந்த உடையைப் பாருங்கள். இது படைத் தலைவருடையது.
என்னது? என் தளபதி கொல்லப்பட்டு விட்டானா?
என்னைக் கொல்ல ஆளனுப்பிய அந்த அரசனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்.


இறந்த தளபதியின் மகன் ஹர்ஷதத்தன் பெரிய வீரன்.
என் தந்தையைக் கொன்ற அந்தக் காட்டு மிராண்டியை நான் அழித்தே தீருவேன்.
அரசகுமாரி ஸ்வர்ணகுமாரியும் தோழியரும்.
அரசகுமாரி, இன்று உங்கள் பிறந்தநாள்.
இன்று ஆற்றில் போய் நீராடலாமா?
என்ன இதமான குளிர்!
அக்கரைக்குப் போகலாமா?
நான் போகப் போகிறேன்.
இளவரசி ஆற்றின் மையத்தை அடைந்த போது—
ஹ..ஹ..ஹா... சர்ர்...ர்...
காட்டு மிராண்டியின் பயங்கர முகத்தைக் கண்ட இளவரசி மயங்கிச் சரிந்தாள்.


இளவரசியைத் தூக்கிக் கொண்டு அந்தக் காட்டு
மிராண்டி ஆற்றைக் கடந்து காட்டுக்குள் போனான்.
ஆ...
ஐயோ


உதவி... உதவி...!
இளவரசியை.... காட்டுமிராண்டி தூக்கிக் கொண்டு போய் விட்டான்.
என்னது..?


இனித் தாமதிக்கக் கூடாது!


கலங்காதீர்கள் அரசே... இளவரசியை நான் மீட்டு வருகிறேன். தைரியமாயிருங்கள்.
கடவுளே! என் மகளைக் காப்பாற்று!
ஹர்ஷதத்தா, நீ இதைச் செய்தால், என் மகளும், என் நாடும் உனக்கே சொந்தம்.
என்னால் இது முடியும். இல்லையேல், என் தாய் நாட்டுக்காக உயிர் துறந்தவனாவேன்.
அப்படியானால், உடனே புறப்படு. இன்று முதல் நீதான் நமது பிரதம தளபதி.
யாரங்கே படைகள் தயாராகட்டும்.


வேண்டாம் அரசே, அது அபாயகரமானது. படைகளைக் கண்டால் அவன் தாக்கக் கூடும்.
அப்புறம் என்ன நடக்குமென்று சொல்ல முடியாது.
வேறென்ன செய்யப் போகிறாய்?
அறிவே பெரிய ஆயுதம்.
முதலில் அவன் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.
நான் இன்றே புறப்படுகிறேன், இந்த விவரம் வெளியே தெரிய வேண்டாம்.
சரி, அப்படியே ஆகட்டும்.


ஹர்ஷதத்தன் ஆற்றங்கரைக் கிராமத்தை அடைந்தான்.
இங்கேதான் என் தந்தையை அந்த மிருகம் கொன்றது.
அங்கே இருந்து காட்டுக்குள் புகுந்தான் ஹர்ஷதத்தன்.
இருட்டத் துவங்கி விட்டது. இனி காட்டுக்குள் போவது அபாயம்.
அந்தக் குன்றின் மேல் வெளிச்சம் தெரிகிறதே!


குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டுக் குன்றை நோக்கி நடந்தான் ஹர்ஷதத்தன்... அப்போது...
நான் தரையில் புதைகிறேன். இது புதை மணலோ...
அவனை நோக்கி ஒரு காட்டுக் கொடி நீண்டு வந்தது.
மேலே தெரிந்த வெளிச்சத்தருகே இருந்து ஒரு குரல்.
பயப்படாதே! அந்தக் கொடியைப் பிடித்து மேலே ஏறி வா.
காட்டுக் கொடியைப் பிடித்து மேலேறி வந்த ஹர்ஷதத்தன், அங்கே ஒரு சாமியாரைக் கண்டான்.
வா... பயப்படாதே. இந்தக் குன்றைச் சுற்றிப் புதை மணல். அந்தக் காட்டுமிராண்டி இங்கே வரமாட்டான்.


யார் நீங்கள்? எங்கே போகிறீர்கள் இந்த ராத்திரியில்?
நான் அவனைத் தேடி வந்திருக்கிறேன்... அந்தக் காட்டு மிராண்டியை.
அவன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். உங்களுக்கு தெரியுமா அவன் இருப்பிடம்?
தெரியும்!
எங்கே... தயவு செய்து சொல்லுங்கள்.
அவசரம் வேண்டாம். அவன் சாதாரண ஆளல்ல...
உங்கள் அரசனும், படைகளும் எத்தனையோ சிரமப்பட்டும் அவனைப் பிடிக்க முடியவில்லை என்பதை மறக்காதே!
அவனை நீ தனியாக எப்படிச் சமாளிப்பாய்?


அவனைப் பற்றிய சில விவரங்களை நான் சொல்கிறேன்.
அவன் ஒரு யானையை விடப் பலசாலி.
தீயைக் கண்டால் மட்டுமே அவன் பயப்படுவான்.
பகல் முழுதும் அவன் உறங்குவான். இரவானதும் அவன் வேட்டைக்குப் புறப்படுவான்.
எங்கே இருக்கிறது அவன் இருப்பிடம்?
மிக உயரத்திலுள்ள ஒரு குகையில் அவன் வாழ்கிறான்.
அங்கே ஏறிச் செல்வது சாதாரண காரியமல்ல. அங்கே என்னென்ன ஆபத்துக்கள் உண்டோ தெரியவில்லை.


மறுநாள் காலை, ஹர்ஷதத்தன் மறுபடி தன் பயணத்தைத் துவங்கினான்.
கடவுளே! இளவரசி உயிரோடிருக்க வேண்டும்.


அந்தச் சாமியார் சொன்ன வழியில் நீண்ட நேரம் பயணம் செய்தான். பொழுது சாய்ந்தது. அந்த மலையடிவாரத்துக்கு வந்து சேர்ந்தான்.
அப்பா... எத்தனை உயரம்? எப்படி இதன் உச்சிக்கு ஏறுவது?


அதோ ஒரு உடும்பு. அதைப் பிடித்தால் உபயோக மாயிருக்கும்.
ஒரு காட்டுக் கொடியை சுருக்கிட்டு வீசி அந்த உடும்பைப் பிடித்தான்.
உன்னை உயர வீசப் போகி றேன். உன் பலத்தில்தான் நான் மலை ஏற வேண்டும்.
நீண்ட கொடியில் உடும்பைக் கட்டி மேலே வீசினான், ஹர்ஷதத்தன்.


வெற்றி! உடும்பு பற்றிக் கொண்டு விட்டது.
கொடி அறுந்தால் என் எலும்பு கூட கிடைக்காது.
அப்பாடா! ஏறி விட்டேன், ஒரு வழியாக.
மாலையாகி விட்டது., அவன் என்னைப் பார்த்து 'விட்டால், காரியம் கெட்டு விடும்.
இந்தக் குகையாய் தான் இருக்க வேண்டும்.


சப்தமில்லாது நடந்து குகைக்குள் நுழைந்தான், ஹர்ஷதத்தன்.
இளவரசி!
ஹர்ஷதத்தன்! இங்கே எப்படி வந்தீர்கள்?
எல்லாம் சொல்கிறேன், அந்தக் காட்டு மிராண்டி எங்கே?
உறங்குகிறான். எங்காவது ஒளிந்து கொள் ளுங்கள். அவன் விழித்துக் கொள்ளும் நேரமாகி விட்டது.


இப்போதைக்கு அங்கே ஒளிந்து கொள்கிறேன்.
அப்பா, என்ன பயங்கரக் குறட்டை யொலி!
ஙிர்..ர்.
காட்டுமிராண்டி விழித்துக் கொண்டதும்—
இளவரசி, நீ சாப்பிட ஒரு கொளுத்த மனிதனைப் பிடித்து வரட்டுமா?'
அய்யோ! வேண்டாம்...
இவனைப் பின்தொடர்ந்தால் வெளியே போக வழி கண்டுபிடிக்கலாம்!


ஹர்ஷதத்தன் காட்டு மிராண்டியைட் கவனமாகப் பின் தொடர்ந்தான்.
அவன் மற்றொரு குகைக்குள் நுழைந்தான், பின்னாலேயே ஹர்ஷதத்தனும் தொடர்ந்தான்.
கீழே போக படிக்கட்டுகள்!
காட்டுமிராண்டி படிக்கட்டு வழியே கீழே இறங்கினான்.
ஓ... இது கீழே போவதற்கான வழியா..?



முதலில் இளவரசியைப் பத்திரப்படுத்தத வேண்டும். இல்லா விட்டால் ஆபத்தாகிவிடும்.
இளவரசி! அவன் திரும்பும் முன் தப்ப வேண்டும், சீக்கிரம்.
ஆனால்... இங்கிருந்து எப்படிக் கீழே இறங்குவது?
அதற்கு வழி இருக்கிறது, வாருங்கள்.
ரகசிய வழியில் அரசகுமாரியும் ஹர்ஷனும் கீழே இறங்கினார்கள்.
பார்த்து, மெதுவாக...
ஓ...


ஹர்ஷதத்தன், ஸ்வர்ணகுமாரியைக் குதிரையில் ஏற்றிக் கொண்டு அதி வேகமாகப் புறப்பட்டான்.


சன்யாசியின் குடிசைக்கு அவளை அழைத்து வந்தான்.


மகரிஷி... நான் அவன் இருப்பிடத்தை கண்டுபிடித்து விட்டேன். இதுதான் இளவரசி.
நல்லது. குமாரி பிழைத்ததில் சந்தோஷம்.


நான் உடனே திரும்பிப் போக வேண்டும்.
எங்கே?
அந்தக் காட்டு மிராண்டியின் குகைக்கு.
அய்யோ வேண்டாம்.
ஹர்ஷதத்தா நீங்கள் அரண்மனைக்கு திரும்பிப் போங்கள்.
இல்லை என் தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்காமல் நான் அரண்மனைக்குத் திரும்ப மாட்டேன்.
ஒரு வேளை, நான் திரும்பி வராவிட்டால், இளவரசியை அரண்மனையில் சேர்த்து விடுங்கள்.


உன் அறிவிலும், வீரத்திலும் எனக்கு நம்பிக் கை இருக்கிறது. போய் வென்று வா, வீரனே!
காட்டு மிராண்டியின் குகையை நெருங்கிய போது, முனிவரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன, ஹர்ஷ தத்தனுக்கு.
அவனுக்குத் தீயைக் கண்டால் மட்டுமே அச்சமாம்.
ஹர்ஷதத்தன் ரகசிய வழியினருகே கட்டைகளை வெட்டிப் போட்டுக் குவித்தான்.
அதில் தீ வைத்தான்.


அதே சமயம், அரச்குமாரியைக் காணாத கோபத்துடன் உலவிக் கொண்டிருந்தான், அந்த அரக்கன்.
இங்கே வந்து அவளைக் கடத்திப் போனவன் யார்..?
நான் தான்.
ஆ... யார் நீ?
உன்னால் கொல்லப்பட்ட தளபதியின் மகன் ஹர்ஷதத்தன்.
ஹா... ஹா... நீ எனக்கு உணவாகப் போகிறாய்... ஹா...ஹா...!
தன்னைப் பிடிக்க வந்த நீண்ட கையை ஹர்ஷதத்தன் ஓங்கி வெட்டினான்.
ஆ...


கர்..ர்..ர்...
இனி இங்கே நிற்பது சரியல்ல...
ஹர்ஷதத்தன் மின்னல் போலப் படிகளில் இறங்கி ஓடினான்.
வாசலில் எரிந்து கொண்டி ருந்த தீயினூடே பாய்ந்து வெளியே குதித்தான்.
பின் தொடர்ந்து வந்த காட்டு மிராண்டி தீயைக் கண்டு பயந்து அலறியபடி திரும்பி மேல் நோக்கி ஓடினான்.


ஹர்ஷதத்தன் கீழே இருந்தே சவால் விட்டான்.
உன் கடைசி தினம் இது. இனி உன்னால் கீழே இறங்கி வர முடியாது.
வெறி தலைக்கேறிய காட்டுமிராண்டி கற்களை எடுத்துக் கீழே வீச ஆரம்பித்தான்.
தொடர்ந்து ஹர்ஷதத்தன் வெறுப் பேற்ற, தன்னை மறந்து கற்களைத் தூக்கி எறிய ஆரம்பித்த அரக்கனின் கால் இடறி...
ஆ... ஆ...
அப்பாடா! இந்தக் கொடியவனின் கதை முடிந்தது.


ஸ்வர்ணகுமாரியை மீட்டு, அரக்கனை அழித்துத் திரும்பிய ஹர்ஷதத்தனுக்கு மகதபுரத்து மக்கள் பிரம்மாண்டமான வரவேற்பளித்தனர்.
விரைவிலேயே ஹர்ஷதத்தனுக்கும், இளவரசிக்கும் திருமணம் நடந்தது. ஹர்ஷதத்தன் மகதபுரத்தின் அரசனாக முடிசூட்டப்பட்டான்.
நீடூழி வாழ்க!



# பயங்கரப் பறவை


கதை: குமார் மோகன்
சித்திரம்: அஜயன்
நன்னிலம் என்ற கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன், மீனா என்றொரு சிறுமி இருந்தாள். தாயை இழந்த மீனாவையும், அவள் தம்பி சின்னுவையும் தந்தை சிரமத்துடன் வளர்த்து வந்தார்.
ஒரு நாள், மீனாவின் தந்தை வியாபாரத்துக்காக, தூரத்து நகருக்குப் போக வேண்டி இருந்தது.
குழந்தைகளே! உங்களைத் தனியே விட்டுப் போக எனக்கு மனதில்லை.
பயப்படாதீர்கள். நான், தம்பி சின்னுவைப் பார்த்துக் கொள்கிறேன்.
© 1993 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
அடுத்த வீட்டில் வசித்த தனம், மீனாவுக்கு அத்தை முறை. அவளிடம் வந்தார் மீனாவின் தந்தை.
சகோதரி, நான் சீக்கிரமே திரும்பி விடுவேன். அதுவரை என் குழந்தைகளையும், எங்கள் வீட்டையும் சற்றுக் கவனித்துக் கொள்ளுங்கள்.
நீ போய் வா அண்ணா. நான் பார்த்துக் கொள்கிறேன்.
நீ திரும்பி வரவே வேண்டாம். உன் சொத்தை எல்லாம் நான் சரியாகக் கவனித்துக் கொள்கிறேன்.


நாட்கள் கடந்தன. மீனாவின் தந்தை திரும்பி வரவில்லை.
அழாதே சின்னு... அப்பா ஏன் இத்தனை நாளா வரலைன்னு தெரியலயே...
அழாதே மீனா... அப்பா திரும்பி வந்துடுவார். பயப்படாதே... நீ அழுதால் குழந்தையை யார் கவனிப்பார்கள்?
அப்பா.. அப்பா...
அப்பாவைக் காணோமே அத்தை... நாங்களென்ன செய்வது?
இவள் தந்தை வராமலே போய் விட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்?
உங்கப்பா வருவாரு... வா... வந்து போய்ப் பாரு.
அம்மா,.. மீனாவின் அப்பா போன கப்பலைக் காணவில்லை என்று பேசிக் கொள்கிறார்கள்.
அய்யோ... அண்ணா. போய் விட்டாயா?
இப்போது எல்லா சொத்தும் என்வசமாகி விட்டது. ஹ..ஹா..ஹா..



எவ்வளவு நாளாச்சு அத்தை, இன்னும் அப்பா வரலியே... நான் போய் விசாரிச்சு வரட்டுமா?
போ.. போய் வேலையைப் பார்... உன் அப்பன் திரும்பி வரப்போவதில்லை, போ.. ம்...
தம்பீ... நம் அப்பா இனி திரும்பி வரமாட்டாராம். அத்தை சொல்கிறாள்...
அப்பா.. அப்பா...
அம்மாவும், இறந்து விட்டார்கள். அப்பாவுமில்லை. நானும் என் தம்பியும் அனாதைகளாகி விட்டோம்.
மீனாவின் தந்தை வரப்போவதில்லை என்றறிந்ததும் அத்தையின் போக்கு மாறியது.
அந்தப் பையனை இறக்கிவிட்டு விட்டுப் போய் கொஞ்சம் தண்ணி பிடிச்சுக்கிட்டு வா..


ஒரு நாள்...
என் அப்பா எங்கே என்று நான் போய் விசாரிக்கட்டுமா அத்தை...?
ஒரு வேலை செய்... உன் தம்பியையும் எடுத்துக் கொண்டு போய் தேடு... போ...
மீனா, தன் தம்பியைத் தூக்கிக் கொண்டு தந்தையைத் தேடிப் புறப்பட்டாள்.
அடிப்பாவி! ஏன் அந்தக் குழந்தையை தனியே அனுப்பினாய்?
நீ உன் வேலையைப் பாரு கிழவி!
அப்பாடா! ஒரு வழியா மொத்தச் சொத்துக்களும் என் வசமாகி விட்டது.
அக்கா...... தண்ணீ...
நீ இங்க இரு கண்ணா. நான் தண்ணீர் கொண்டு வருகிறேன்.


டும்.. டும்.. டு
அய்யோ; என்ன சத்தம் அது?
டும்..டு
ஆ..!?
அது ஒரு மிகப்பெரிய பறவை. புயல் காற்றின் ஓசையுடன் பறந்து வந்தது.
அய்யோ... எத்தனைப் பெரிய பறவை... தம்பி... தம்பியைத் தூக்கப் போகிறது...
அந்தப் பறவை மீனாவின் தம்பி சின்னுவினருகே வந்தது.
என் தம்பியைத் தொட்டால் கொன்று விடுவேன். நில்!


மீனா வுக்கும் அந்தப் பறவையைப் பார்த்து அச்சம்தான். ஆனாலும், தன் தம்பிக்காக அவள் அந்தப் பறவையைத் தாக்கினாள்.
கிரி... கிரி...
க்கீ... க்கீ... க்கீ...
விலகித் தப்பிய பறவை, மறுபடி குழந்தையைத் தாக்க வந்தது.
கழியை எடுக்கப் போன மீனா இடறி விழுந்தாள்.
பறவை சின்னுவைப் பாய்ந்து தூக்கியது.
தம்பீ... தம்பீ...!


மீனா அழுதுகொண்டே நதிக்கரையோரம் நடந்தாள்.
ம்... சின்னுவை அந்தப் பறவை எங்கே கொண்டு போயிருக்கும்?
மீனா ஒரு நகருக்கு வந்து சேர்ந்தாள்.
எங்கிருந்து வருகிறாய் மகளே?
நான் ரொம்பத் தூரத்தில் இருந்து வருகிறேன். என் குட்டித் தம்பியை ஒரு பெரிய கழுகு தூக்கிப் போய் விட்டது. அவனைத் தேடிப் போகிறேன்.
மகளே! இந்த நகரில் எல்லோருக்குமே இதே பிரச்னைதான்.
இந்த நகரில் இருந்து ஏகப்பட்டக் குழந்தைகளைக் கொண்டு போய் விட்டது அந்தக் கழுகு.
குழந்தைகளை அந்தப் பறவை எங்கே கொண்டு போகிறது?
தெற்கே இருந்து வருகிறது அந்தப் பறவை.
இரவாகி விட்டதம்மா... வா, எங்கள் வீட்டில் வந்து தங்கிப் போகலாம்.


கடவுளே... என் தம்பியை அந்தப் பறவை கொன்றிருக்குமோ..?
அடுத்த நாள் மீனா விழித்த போது, ஒரு பெண்ணின் சோகமான அழுகைக் குரல் கேட்டது.
அய்யோ... என் மகனை அந்தப் பறவை தூக்கிக் கொண்டு போய் விட்டதே!
பயப்படாதீர்கள் தாயே, குழந்தைகளை அந்தப் பறவை எங்கே கொண்டு போகிறதென்று நான் பார்த்து வருகிறேன்.
அது மிகவும் பயங்கரமான வேலை. உன்னால் முடியாது.
மீனா, தம்பியைத் தேடிப் புறப்பட்டாள். கையில் கொஞ்சம் கட்டுச் சோறும் எடுத்துப் போனாள்.
சற்று தூரம் போன மீனா, ஒரு காட்டுக்குள் வந்து சேர்ந்தாள்.
இங்கே அமர்ந்து கொஞ்சம் சாப்பிடலாம்.


அந்த வழியே ஒரு கிழவன் வந்தான்.
குழந்தாய், இந்தக் காட்டில் தனியே என்ன செய்கிறாய்?
நான் என் தம்பியைத் தேடிப் போகிறேன்.
இருட்ட ஆரம்பித்து விட்டது. நீ என்கூட வா, வழி காட்டுகிறேன்.
மீனா அந்தக் கிழவன் பின்னே நடந்தாள்.
ஹி..ஹி... இதுதான் என் வீடு. உள்ளே வா... மகளே.


கிழவன் சில மந்திர வார்த்தைகளை உச்சரித்தான். கதவு தானே திறந்தது.
அப்பா... எவ்வளவு பெரிய வீடு!
வா... மகளே.... உள்ளே வா..
மீனா உள்ளே வந்த அதே வினாடியில், கதவு தானே மூடிக்கொண்டது.
தாத்தா.... இதென்ன..?
பயப்படாதே மகளே...
ஹி..ஹி.. பசியாய் இருப்பாய் முதலில் கொஞ்சம்சாப்பிட்டுவிட்டு தூங்கு... நாளை பேசலாம்.
சரி தாத்தா.


அடுத்த நாள் காலையில்—
தாத்தா... என் தம்பி சீனு எங்கே இருக்கிறான்? சொல்ல மாட்டாயா..?
ஹி... ஹி... இப்போ எனக்கு நேரமில்லை. நான் சாயந்திரம் வந்து சொல்கிறேன்.
மாலையில் மீனா மறுபடி கேட்டாள்.
இரண்டு நாள் இங்கிரு மகளே அப்புறம் சொல்கிறேன். சும்மா இருக்க வேண்டாம். ஏதாவது சின்னச் சின்ன வேலைகள் செய்து கொண்டிரு..!
ஒரு வழியாக இரண்டு நாட்கள் கழிந்தன.
இங்கே இப்படி உட்கார்ந்திருந்தால் சின்னுவை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறேன்?
மீனா அங்கிருந்து தப்பியோட தீர்மானித்தாள்.
இந்தக் கதவைத் திறக்க முடியலையே... நான் எப்படி வெளியே போவேன். ஊம்..ம்...ம்...
ஏய் மீனா! இங்கே வா...



மீனா, என் பேர் முத்து. பல வருடங்களாக நான் இங்கே இருக்கிறேன். இங்கிருந்து தப்ப ஒரு வழியுமில்லை. நீ அழுது பயனில்லை....
இனி, நான் எப்படி என் தம்பியைக் கண்டுபிடிப்பேன்?
அந்தக் கிழவன் மோசமானவன். அடிமை வேலைக்காகத்தான் நம்மை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறான்.
நான் சொல்வது போல் செய்தால் நாம் இருவரும் இங்கிருந்து தப்பலாம்.
சரி முத்து! நீ சொல்வது போலச் செய்கிறேன்.
இரவு பூஜை முடித்துக் கிழவன் உறங்கிக் கொண்டிருந்தான்.
அந்தக் கிழவன் தூங்கட்டும். கயிற்றைப் போட்டுக் கட்டி விடலாம்.
கிழவனை இறுகக் கட்டிப்போட்டு விட்டு, தலையணைக்கடியில் இருந்த சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.
ஸ்ஸ்... மீனா, வேகமா ஓடு!
12


இந்த வீட்டுக்குப் பின்புறக் கதவு ஒன்று இருக்கிறது. அந்தக் கதவுக்கான சாவிதான் இது.
மீனா, இந்த விளக்கைப் பிடி.
அந்தக் கதவின் பூட்டைச் சுலபமாகத் திறந்து விட்டான் முத்து.
ம்.. மீனா... பூட்டு திறந்து விட்டது.
அதே சமயம், கிழவன் விழித்துக் கொண்டான்.
ஆ... இது என்ன... இது இந்தப் பசங்க வேலைதான். ஓடித்தப்பும் முயற்சியாய் இருக்கும்... அது அவ்வளவு சுலபமில்லை.
கிழவன், ஒரு மந்திரம் சொல்லி தன் உடலைச் சிறியதாக்கினான். கயிறு அவிழ்ந்து விட்டது.
எழுந்து நின்ற கிழவன், மறுபடி பெரிய உருவமாக மாற்றிக் கொண்டு புறப்பட்டான்.


அதே சமயம், டம..டம...டம... என்று பெரிய சப்தத்துடன் புறவாசல் கதவு திறந்து, மீனாவும், முத்துவும் வெளியே ஓடினார்கள்.
அய்யோ... இங்கே பயங்கர இருட்டாய் இருக்கிறது. நான் வரமாட்டேன்.
ஓடு... முத்து... கிழவன் வந்துவிடுவான், ஓடு
அச்சமூட்டும் இருள்... அடர்ந்த கானகம். அதில் மாட்டிக் கொண்டார்கள் முத்துவும், மீனாவும்.
அதே சமயம், கிழவன் வாயிலருகே வந்தான்.
ஹ..ஹா...ஹா... எங்கே ஓடினாலும் உங்களை விடமாட்டேன் பசங்களா... ஹ..ஹா..ஹா...


ஐயோ... முத்து, இதென்ன?
கவனமாய் வா மீனா... இது ஓனாய்க் கூட்டம்.
வா, நாம் மரத்தில் ஏறிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் இவை நம்மைக் கொல்லாமல் விடாது.
முத்து மரத்தில் விரைந்து ஏறினான். மீனாவையும் கையைப் பிடித்துத் தூக்கி விட்டான்.
பார்த்து... மெதுவா...
திடீரென்று காடு முழுவதும் வெளிச்சத்தில் மூழ்கியது.
ஹா...ஹா... கீழே வாங்கடா பசங்களா..?


முத்து. இப்போ நாம் என்ன செய்ய..?
மீனா, தைரியமாயிரு... ஓனாய்க் கு மரத்தில் ஏறத் தெரியாது.
ஓனாய்கள் மரத்தைச் சூழ்ந்து நின்று கொண்டன.
பயப்படாதே மீனா...
..??
கீழே போட்டுடாதே...
அய்யோ..!
போச்சு...
தீப்பந்தம் கீழே விழுந்ததும் காய்ந்த புல்லில் தீப் பிடித்துக் கொண்டது. தீயைப் பார்த்த ஓனாய்கள் இதைக் கண்டு மிரண்டு பாய்ந்தோடின.
அய்யோ...! இதென்ன..?


சற்று நேரத்தில் காடு முழுவதும் தீ பரவியது.
ஓநாய்கள் ஓடி விட்டன. ஆனால், நாம் இப்ப எப்படி மரத்திலிருந்து இறங்குவது?
பயத்தில் கை தவறித் தீப்பந்தத்தைக் கீழே போட்டுட்டேன். கோபிச்சுக்காதே... முத்து...
தீயின் வெப்பம் அதிகமாயிற்று.
இப்போ என்ன செய்யறது முத்து?
மீனா! காற்று வேகமாக வீசுகிறது. காடு முழுக்க தீ பரவும் போலிருக்கிறது. நாம் தப்புவதெப்படி...
அதே சமயம், வானத்தில் மழை மேகங்கள் திரள ஆரம்பித்தன.
மழை பெய்தால் நாம் தப்பலாம்.
நீ சொல்வது சரிதான்.
மழை கொட்டத் தொடங்கியது.
தீயின் வெப்பம் குறைய ஆரம்பித்தது.


ஒரு வழியாக விடிந்தது.
எழுந்திரு மீனா, விடிந்து விட்டது.
தீ அணைந்து விட்டது.
தீப்பந்தத்தை நீ கீழே போட்டதும் ஒரு வகையில் நல்லதுதான்.
அவர்கள் உச்சி நேரம் வரை நடந்து ஒரு நகரில் வந்து சேர்ந்தார்கள்.
அப்பாடா! ஒரு வழியாக ஊருக்குள் வந்து சேர்ந்து விட்டோம்.
நடந்து, நடந்து என் கால் வலிக்கிறது.
நகருக்குள் நுழைந்தவுடன்—
மீனா, இது ஒரு விநோத நகரமாயிருக்கிறதே! எல்லாமே தங்க நிறமாயிருக் கிறது பார்!
ஆமாம்..! இந்தப் பூவைப் பார், எப்படி மின்னுகிறது?



மாமா... இந்த நகரின் பெயரென்ன?
இது தங்க நகரம்... மனிதக் குழந்தைகளான நீங்கள் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்?
அவர்கள் ஒரு ஆளை அணுகினார்கள்.
நீங்கள் மனிதர்களல்லவா?
இல்லை. நாங்கள் கந்தர்வர்கள்.
அப்படியானால் நாங்கள் இங்கிருந்து போய் விடுகிறோம்.
ஹ..ஹ..ஹா... மகனே, இங்கே வந்தால் திரும்பிப் போக முடியாது!!
ஏனெப்படி..?
மாலையானதும் இந்த நகரம் மறைந்து விடும். கூடவே, நீங்களும் மறைந்து விடுவீர்கள்.
அய்யோ... அப்படியானால், என் தம்பியை நான் எப்படிக் கண்டு பிடிப்பேன்.?
பயப்படாதே மகனே! நாம் அதற்கொரு வழி கண்டுபிடிக்கலாம்.


மனிதர்கள் இங்கே வாழ்வது கடினம். வா, உங்களுக்குக் கந்தர்வலோகக் குழந்தைகளைப் போல வேடம் அணிவிக்கிறேன்.
மகளே... கந்தர்வ வேடத்தில் யாரும் தெரியாமல் கொஞ்ச நாள் இங்கே தங்குங்கள்.
நன்றி மாமா!
முத்து, இங்கே யாருக்கும் ஒரு கவலையுமில்லையா? இங்கே எல்லோரும் எப்போதும் சந்தோஷமாக இருக்கிறார்களே!
இங்கே எதற்கும் குறைவில்லை. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும். சந்தோஷத்திற்கு என்ன குறைச்சல்?
மீனாவும், முத்துவும் கந்தர்வ உலகில் வாழத் துவங்கினார்கள்.
மாமா, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறது.
இங்கே துக்கமே இல்லையல்லவா?
துக்கமில்லா. விட்டாலும் இங்கே வாழ்வது சிறை வாழ்க்கைப் போலத்தான்.


இப்படி இருக்கையில், அங்கே ராஜேந்திரன் என்ற மற்றொரு கந்தர்வன் வந்து சேர்ந்தான்.
ராஜேந்திரா, நீ எங்கோ பயணம்போவதாய் கேள்விப்பட்டேன்... எங்கே போகிறாய்?
நான், என் குடும்பத்தாரோடு சந்தி ரமலையை சுற்றிப்பார்க் கப் போகிறேன்.
சந்திரமலையா..? நீங்கள் துரத்திவிட்ட உங்கள் சகோதரன் அங்கேதானே வசிக்கிறான்?
ம்.. ஆமாம்... ஆனால், அவனை நான் காணப் போவதில்லை.
அவனது கெட்ட செய்கைகளால் ஜனங் கள் அடித்துக் கொண்டு சாகிறார்கள்.
அவன் கூட ஒரு பயங்கரப் பறவை இருக் கிறது. அது, மனிதர்களைத் தூக்கி வந்து அவனிடம் சேர்க்கிறது. அவன் அவர் களை மிருகங்களாக மாற்றி விடுகிறான்.
சற்று நேரத்தில் ராஜேந்திரன் அங்கிருந்து அகன்றான்.
என் தம்பியைத் தூக்கிப் போனதும் அந் தப் பயங்கரப் பறவை தானா மாமா...?
அங்கே போனால் கண்டுபிடிக்கலாம்... ம்...
அங்கே போகும் வழியை நான் காட்டு கிறேன்.


நாளை ராஜேந்திரன் சந்திரமலைக்குப் போகும் போது, அவனுடைய புஷ்பக விமானத்தில்ஒளிந்து கொண்டால், நீங்கள் அங்கே போய்ச் சேர்ந்து விடலாம்.
சரி, மாமா!
இந்த மாயத் தொப்பிகளை வைத்துக் கொள்ளுங்கள். அபாயமான நேரத்தில் இதை அணிந்து கொண்டால், நீங்கள் யார் கண்ணிலும் படமாட்டீர்கள்.
மறுநாள், சந்திரமலைப் பயணத்துக்குத் தயாரானார்கள்.
உஷ்... சத்தம் போடாதே!
சில நிமிடங்களில் விமானம் நம்ப முடியாத வேகத்தில் சந்திரமலைக்குப் பறக்கத் துவங்கியது.


ராஜேந்திரனின் புஷ்பக விமானம் சந்திரமலையில் வந்து இறங்கியது.
வந்து சேர்ந்து விட்டோம் என்று தெரிகிறது.
யாரும் பார்க்கும் முன் இறங்கிவிடு.
கந்தர்வனும் அவனைச் சேர்ந்தவர்களும் இறங்கிப் போனதும், முத்துவும், மீனாவும் மெல்ல கீழே இறங்கினார்கள்.
காட்டுக்குள் சற்று தூரம் நடந்தார்கள்.
முத்து, எனக்குப் பசிக்கிறது.
கொஞ்ச தூரம் நடப்போம். ஏதாவது பழம் கிடைக்கும்.
ஆகா, சுவையான பழங்கள்.
உன் பசி அடங்கி விட்டதா?
அதோ, அதுதான் கந்தர்வர் வசிக்கும் மலை என்று தோன்றுகிறது.
நாம் அங்கே போவோம்.




© 1998 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED


இருவரும் குகைக்குள் நுழைந்தார்
கள... திடீரென்று
அய்யோ..!
மீனா, காப்பாத்து!
முத்து! இதைப் பிடிச்சுக்கோ..!
கவனமா ஏறிவா முத்து.
அப்பாடா!
மீனா! இந்தப் பள்ளம் நிறைய விஷப்பாம்புகள்!
தப்பிப் பிழைத்தது அதிசயம்தான்!






.. பார்வதி சித்திரக் கதை



அற்புதம்தான்! எவ்வளவு பெரிய பறவை!
அதோ வருகிறது அந்தப் பறவை..
பறவை, தன் குஞ்சுகளுக்கு இரை ஊட்டியது.
முத்துவும், மீனாவும் அதன் கண்ணில் படவில்லை.
நாம் அதன் காலில் நம்மை இறுகக் கட்டிக் கொள் வோம். நம்மை அதனால் பார்க்க முடியாது. இந்தத் தொப்பியின் புண்ணியத்தில்.
சரி மீனா.
இது சந்திர மலைக்குப் போகிறது என்று நம்புவோம்.
தங்களைப் பறவையின் காலோடு சேர்த்துப் பிணைத்துக் கொண்டார்கள்.



சிறிது நேரத்தில் அந்தப் பறவை வானில் எழும்பியது. கந்தர்வன் இருப்பிடத்தை நோக்கிப் பறக்கத் துவங்கியது.
நகரின் மேல் வட்டமிட்டது.
கந்தர்வன் இருப்பிடத்தை அடைந்ததும், முத்துவும், மீனாவும் கட்டவிழ்த்துக் கொண்டு இறங்கினார்கள்.
சரி, இனி இங்கே எங்காவது ஒளிந்திருப் போம்.
நாம் ஏன் ஒளிந்து கொள்ள வேண்டும். நாம்தான் யார் கண்ணிலும் பட மாட்டோமே!


மீனாவும், முத்துவும் சிறிது தூரம் போனதும், ஒரு அற்புதக் காட்சியைக் கண்டார்கள்.
ஓ... எத்தனை வித மிருகங்கள்.
அந்த அதிசயத்தைப் பார்! ஒரு முயல் புலி மேல் சவாரி செய்கிறது. பாரேன்!
அதே சமயம், வேலைக்காரிகள் பின் தொடர, ஒரு பெண் குழந்தை அங்கே வந்தது.
எனக்கு மிருகங்களோடு விளையாடிச் சலித்து விட்டது. என்னைப் போன்ற குழந்தைகள் தான் வேண்டும் எனக்கு....
சரி சாலினி, அப்பாவிடம் சொல்.
இது கந்தர்வனின் மகளாயிருக்கும், இல்லையா?
ஆமாம்... இதெல்லாம் அவன் வளர்க்கிற மிருகங்களாக இருக்க வேண்டும்.
நாம் என் தம்பியைப் பற்றி விசாரிப்போம்.
வா, நாம் அவளருகே போவோம்.
இருவரும் தொப்பியைக் கழற்றிவிட்டு சாலினியின் அருகே வந்தார்கள்.
யார் நீங்கள்? இங்கே எப்படி வந்தீர்கள்?
உன்னோடு விளையாட வந்த நண்பர்கள், நாங்கள்.




பார்வதி சித்திரக் கதை



நாட்கள் கடந்தன. கந்தர்வனைக் காணாது சாலினி அழத் துவங்கினாள்.
ம்..ம்..ம்... இத்தனை நாளா கியும் அப்பாவைக் காணோம். எங்கப்பா... வேணும்...
அப்பாவைக் காணோமென்றதும் உனக்கு எத்தனைத் துக்கமாயிருக்கிறது? இங்கேமிருகங்களாக இருக்கும் குழந்தைகளின் பெற்றோரும் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்கள்? யோசித்துப் பார் சாலினி.
சாலினி! அழாதே! அப்பா சீக்கிரம் வந்து விடுவார்.
உண்மைதான். குழந்தைகளை மட்டுமல்ல, அவர்களின் அப்பா, அம்மாவைக் கூட மிருகங்களாக்கி இருக்கிறோம்.
இவர்களின் துக்கம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது.
நீ சொன்னால், உன் தந்தை எல்லா மிருகங்களையும் மீண்டும் மனிதர்களாக்கி விடுவாரல்லவா?
அப்பா வரட்டும், உடனே செய்யச் சொல்கிறேன்.
அதோ, என் தந்தை வருகிறார். நீங்கள் சற்று நேரம் ஒளிந்திருங்கள்.
அப்பா... உங்களைக் காணாமல் நான் ரொம்பச் சிரமப்பட்டேன்... அப்புறம் அப்பா... எனக்குஇரண்டு நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். அவர்களை நீங்கள் ஒன்றும் செய்து விடக் கூடாது.
நான் ஒரு ராட்சசனோடு சண்டையிட வேண்டி வந்து விட்டது. அதுதான் தாமதம். எங்கேஉன் நண்பர்களைக் கூப்பிடு!



கந்தர்வ ராஜாவின் முன்னால் மீனாவும், முத்துவும் வந்து நின்றார்கள். அவரிடம் நடந்தது எல்லாம் சொன்னார்கள்.
ராட்சசனோடு போரிட்ட போது, என் மனம் சாலினியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.
தம்பியைத் தேடிப் புறப்பட்ட மீனாவின் சாகசத்தையும், அவளுக்கு உதவ வந்த முத்துவின் தைரியத்தையும் பார்க்கும் போது, எனக்கு மனிதர்களிடத்தில் மிகவும் அன்பு தோன்றுகிறது.
குழந்தைகளை அழைத்துக் கொண்டு கந்தர்வ ராஜா வெளியே வந்தார். அப்போது—
அய்யோ... சிங்கம்!
பயப்படாதே மகளே!
கிர்ர்ர்...ர்
கந்தர்வ ராஜா, ஏதோ மந்திரம் சொன்னார். சிங்கம் ஒரு மனிதனாக மாறி விட்டது. முயல் தம்பி சின்னுவாக மாறியது.
மக்களே..!
வே... அப்பா!
அதே சமயம், எல்லா மிருகங்களும் மனித உருவம் பெற்றன.
மீனாவும், முத்துவும் என் கண்களைத் திறந்து விட்டார்கள். நான் செய்த தவறுக்கு மன்னியுங்கள். என் பறவை உங்களை எல்லாம் உங்கள் நாட்டில் கொண்டு போய்ச் சேர்க்கும்!
மீனாவும், முத்துவும், சின்னுவும் கொஞ்ச நாள் கந்தர்வ ராஜாவின் நகரில் தங்கி இருந்தார்கள். பின்னால், கந்தர்வனின் பயங்கரப் பறவை அவர்களை நன்னிலத்தில் கொண்டு போய் விட்டது.